RAMCO SUPERGRADE
Engineered for Concrete

## வேதி சேர்கலவைகள் (Chemical Admixtures)

சென்ற வாரம் ஐந்து வகையான வேதி சேர்கலவைகள் (Chemical Admixtures) குறித்து பார்த்தோம். அவைகளைத்தவிர, நீர் கசிவை தடுப்பதற்காக கடைகளில் விற்கப்படும் சில நீர்த் தடுப்பு சேர்கலவைகளை (Water proofing Admixture) வாங்கி சிலர் கான்கிரீட்டில் கலக்கிறார்கள். இனி சேர்கலவைகளை பயன்படுத்துவதற்கு முன்பு சோதிக்க வேண்டியதன் அவசியம் குறித்து காண்போம்.

சேர்கலவைகள் பல்வேறு பெயர்களில், பல்வேறு நிறுவனங்களால் தயாரிக்கப்பட்டு சந்தையில் விற்பனை செய்யப்படுகிறது. ஒரு குறிப்பிட்ட சேர்கலவை அனைத்து நிறுவனங்களின் சிமெண்ட்டோடும் பொருந்தாது. ஒரு நிறுவனத்தின் சிமெண்ட்டோடு பொருந்தக்கூடிய சேர்கலவை, மற்றொரு நிறுவனத்தின் சிமெண்ட்டோடு பொருந்தவேண்டிய கட்டாயம் இல்லை. பொருந்தாத சேர்கலவையை கான்கிரீட்டில் கலந்தால், அதன் இறுகும் நேரம், ஈட்டும் வலிமை, வேலைக்கு உகந்த தன்மை போன்றவை பாதிக்கப்படும், வெடிப்புகள் கூட ஏற்படலாம்.

சிமெண்ட் என்பது பல வேதிப்பொருட்கள் கலந்துள்ள ஒரு மூலப் பொருள். சிமெண்ட்டின்வேதியியல் தன்மைகள்அதனுள்இருக்கும் பல வேதிப்பொருட்களின் சேர்க்கையினால் மாறுபடுகிறது. இப்படிப்பட்ட வேதிப்பொருட்கள் நிறைந்த சிமெண்ட்டோடு, மற்றொரு வேதிப்பொருளான சேர்கலவையை பரிசோதனை செய்து பார்க்காமல் சேர்க்கக்கூடாது. பொருந்தாத சேர்கலவையை சேர்க்கும்போது கான்கிரீட்டின் தன்மை பாதிக்கப்படுகிறது.

எனவே, எந்த ஒரு சேர்கலவையை கான்கிரீட்டில் கலப்பதற்கு முன்பும், அதன் சிமெண்ட்டோடு பொருந்தும் தன்மையை சோதனை (Compatibility Test) செய்து பார்க்கவேண்டும். ஒரு குறிப்பிட்ட சேர்கலவை ஒரு குறிப்பிட்ட நிறுவனத்தின் சிமெண்ட்டோடு பொருந்தவில்லை என்பது சோதனையில் கண்டறியப்பட்டால், அந்த சேர்கலவையை பயன்படுத்தக் கூடாது. சேர்கலவையை தயாரிக்கும் நிறுவனத்தின் பொறியாளரிடம் பொருந்தா தன்மை (Incompatibility) குறித்து தெரிவித்தால், சிமெண்ட்டோடு பொருந்தக்கூடிய அளவிற்கு தேவையான மாறுதலை சேர்கலவையில் செய்வார்கள், அல்லது சிமெண்ட்டோடு பொருந்தக்கூடிய வேறு சேர்கலவையை பரிந்துரைப்பார்கள்.

தொடரும்